

# தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்

# மன்னா..






கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திரு பெயரினால் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**"இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்... சங் 127:3.**

**Behold, children are a heritage from the LORD, the fruit of the womb a reward. Psalm 127:3**

பிள்ளைகள் கடவுளின் பரிசு - Children are God's Gift.... பெற்றோர்கள் என்ற மதிப்பை கொடுப்பது கடவுளின் அருள்.... செல்வம் என்பது "நகலா" என்ற எபிரேயச் சொல்லின் மொழிபெயர்ப்பு ஆகும். இந்த சொல் கடவுள் இஸ்ரவேல் மக்களுக்காக கொடுத்த நாட்டைக் குறிக்கும்.... பிள்ளைகள் கடவுள் அருளும் பரிசு... எனவே நம்முடைய பிள்ளைகளுக்காக கடவுளுக்கு நன்றி சொல்லவும் ஜெபிக்கவும் அழைக்கப்படுகிறோம்.....

இந்த மாதத்தில் திருச்சபைக்குடும்பமாய் நாம் நினைவுக்கூறும் சிறப்பு நாட்கள் 1- 11-2020-சகல பரிசுத்தவான்களின் திருநாள் (All Saint's day) 2-11-2020-சகல ஆத்துமாக்களின் திருநாள் (All Soul's day) மற்றும் சிறுவர் தினம் (Children's Day) ஆகிய சிறப்பு நாட்களுக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்தவும், ஜெபிக்கவும் அழைக்கப்படுகின்றோம்....

தொடர்ந்து நமது திருச்சபையின் Online Zoom வழியாக நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றோம்.... இந்த Covid-19 காலக்கட்டத்தில் நமது ஆவிக்குரிய விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும், தேசங்களுக்காக, திருச்சபை களுக்காக, குறிப்பாக UAE உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக தொடர்ந்து ஊக்கமாய் ஜெபிப்போம்.... அத்துடன் நமது திருச்சபையின் Annual General Body Meeting-2020 கடந்த நாளில் நடைபெற்றது; அதற்காக கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். அதில் நமது திருச்சபையின் பொறுப்பாளர்களாக தொடர்ந்து வரும் மூன்று ஆண்டுகளுக்கு ஆண்டவரின் திருப்பணியை செய்வதற்காக திருச்சபையின் குடும்பங்களாக முழு மனதுடன் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு.எ.எஸ்.கண்ணன்-உபதலைவர், திரு.எஸ்.சுரேஷ்ராஜன்-செயலர், திரு.மெல்பின் பால்-பொருளாளர், திரு.பால் ஞான பிரபு - வார்டன், மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் திருமதி.ஜெயின் ராஜவேல், திருமதி.பிபிலின் நெல்சன், திரு.ரவீந்திரா. ஆகியோருக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்காக திருச்சபை குடும்பமாய் ஜெபிக்க அழைக்கப்படுகின்றோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

# 7th EXECUTIVE COMMITTEE
## 2020-2023 (3 YEARS)

C.S.I.
Tamil Parish
Al Ain

United Arab Emirates

**REV. S. P. BASKAR**
CHAIRMAN & PRESBYTER

**MR. A. S. KANNAN**
VICE CHAIRMAN

**MR. S. SURESH RAJAN**
HON. SECRETARY

**MR. MELBIN PAUL**
HON. TREASURER

**MR. PAUL GNANA PRABU**
WARDEN (PROPERTY IN'CHARGE)

### EXECUTIVE MEMBER'S

**MRS. JEIN RAJAVEL**

**MRS. BIBLIN CHRISTABEL**

**MR. RAVINDRA**






# நம்பிக்கை மிக்க காலை ஜெபம்



நான் கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிட்டேன்; அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்குச் செவி கொடுத்தார்: சங்கீதம்:3:4

I cried aloud to the Lord,
and he answered me
from His Holy Hill.
Psalm - 3:4.



## முன்னுரை.

இந்த சங்கீதம் தாவீதின் வாழ்க்கையோடு தொடர்புடைய சங்கீதம் ஆகும். இது அப்சலோமின் படைகள் தம்மை எதிர்த்து நின்ற போது தாவீது பாடிய பாடலாகும். ஆண்டவர்மீது அவர் கொண்டுள்ள ஆழ்ந்த நம்பிக்கை வெளிப்படுத்துகிறது.

"ஆண்டவரை நம்பினோர் கைவிடப்படார்" என்பதே இந்த சங்கீதத்தின் மையக் கருத்தாகும். நான் படுத்து நித்திரை செய்தேன்; விழித்துக் கொண்டேன்; கர்த்தர் என்னைத் தாங்குகிறார் சங்கீதம்: 3: 5. இந்த வாக்கியத்தின் அடிப்படையில் இந்த சங்கீதம் காலை ஜெபம் என்பதை புரிந்து கொள்ளலாம்.......

### Psalm: 3

Though threatened by many foes, the psalmist prays confidently to the Lord. Ps 3 and 4 are linked by references to glory (see v. 3; 4:2; see NIV text notes on both verses) and to the psalmist's sleep at night (seev.5; 4:8). In v. 5 David speaks of the assurance of his waking in the morning because the Lord will keep him while he sleeps; in 4:8 he speaks of the inner quietness with which he goes to sleep because of the Lord's care. This juxtaposition of prayers with references to waking (morning) and sleeping (evening) at the beginning of the Psalter suggests that God's faithful care sustains the godly day and night whatever the need or circumstances, many of which will be mentioned in this book of prayers.

### சங்கீதம்: 3:1-2 நிகழ்காலத்தில் எதிரிகள் தாக்கல்:

சத்ருக்கள் அல்லது எதிரிகள் இது தாவீதினுடைய பகைவர்களை, துன்பங்களையே குறிப்பதாகும். இந்த பகைவர்கள், துன்பங்கள் பெருகிவிட்டது என்பதாகும் எனவே நிகழ்காலத்தில் எதிரிகளின் தாக்கத்தைக் குறித்து சொல்லப்படுகிறது.

### சங்கீதம்: 3:3-4 கடந்தகால இறையுதவியை நினைவுகூறல்.

"கர்த்தாவே, நீர் என் கேடகமும்".... இந்த வசனத்தில் ஆண்டவர் தற்காப்புக் கருவியாகிரார், ஆண்டவரே என்றும் பாதுகாவலர் என்று புரிந்துக்கொள்ள அழைக்கப்படுகிறோம்...

ஆதி 15:1 நீ பயப்படாதே நான் உனக்குக்கேடகமும்; உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார். இது ஆபிரகாமிற்கு கடவுள் கொடுத்த வாக்குதத்தம் ஆகும்...

"மகிமை அல்லது மாட்சி"...என்பதற்கு நான் மகிமைப்படுத்தும் ஆண்டவர், எனக்கு வெற்றி அளிக்கும் ஆண்டவர், எனக்கு உயர்வு அளிக்கும் ஆண்டவர் என்று பொருள் கொள்ள அழைக்கப்படுகிறோம்.

"நான் கர்த்தரை நோக்கி...தமது பரிசுத்த பருவத்திலிருந்து எனக்கு செவி கொடுத்தார்.... இது சீயோன் மலையின் ஆண்டவரின் பிரசன்னத்தை வெளிப்படுத்துவது ஆகும். ஆண்டவர் எனக்கு பரிசுத்த ஸ்தலத்தில் இருந்து எனக்கு செவிக் கொடுப்பார் என்பதாகும்.


**சங்கீதம்: 3:5-6. ஆண்டவரே எனக்கு உதவி செய்பவர் என்ற நம்பிக்கை:** நான் படுத்து நித்திரை செய்தேன்..... விழித்துக் கொண்டேன்... ஆண்டவர் என்னோடு இருப்பதால் அமைதியில் இரவை கழிப்பேன் எனக்கு பயம் எதுவும் இல்லை என்ற நம்பிக்கையின் பாடல் ஆகும்.

**சங்கீதம்: 3:7-8. ஆண்டவர் செய்கின்ற உதவிக்காக ஜெபம்....** தாடையிலே அடித்து அல்லது கன்னத்தில் அறைந்து,பற்களைத் தகர்த்து போட்டீர்... கன்னத்தில் அறைந்தீர்.... பற்களை உடைத்தீர்... என்பது ஆண்டவர் முந்திய காலத்தில் செய்த உதவியை நினைவு கூறுவதாகும். இது எதிரிகளை ஒடுக்கியதையும், துன்பங்களை எடுத்துப் போட்டதை நினைத்து ஜெபிப்பதாகும்.

எனவே இந்த சங்கீதம் ஆழ்ந்த நம்பிக்கையின் சங்கீதம் ஆகும். இந்த நம்பிக்கையுடன் நாம் வாழ அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக

இறைப்பணியில் உங்கள் ஆயர்
Rev.S.P.Baskar.



# செயலர் மடல்

அன்பிற்கினிய உடன் விசுவாசிகளே... உங்கள் ஒவ்வொருவரையும் ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஒப்பற்ற திருப்பெயரில் வாழ்த்துகிறேன்... புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ள திருச்சபை மக்களாகிய உங்களை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். இவ்வாண்டின் 10 மாதங்களை கடந்து வருவதற்கு கர்த்தர் அளித்த மேலான கிருபைகளை எண்ணி ஆண்டவரை போற்றிப் புகழ்வோம்.

உலகமே நிலைகுலைந்து நிற்கும் நிலையிலும்; கர்த்தரின் பேரருள் நம்முடன் இருந்து நம்மை பாதுகாத்து, பராமரித்து வருகின்ற அன்பை எண்ணி அவருக்கு நன்றி செலுத்துவோம். பலவீனங்கள், இழப்புகள், வேலையின்மை ஊதியமின்மை போன்ற குறைவுகள் காணப்பட்டாலும், இவை எல்லாவற்றின் நடுவிலும் நம்மை கைவிடாத ஆண்டவர் இயேசுவின் மேல் நம் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் இன்னும் உறுதிப்படுத்துவோம்.

நமது திருச்சபையின் வருடாந்திர பொதுக்குழு கூட்டம் அக்டோபர் 16'ம் தியதி நடத்த கர்த்தர் கிருபைக்கூர்ந்தார். தொடர்ந்து அடுத்த மூன்று ஆண்டுகள் கர்த்தருடைய பணியைச் செய்ய கர்த்தர் கொடுத்த வாய்ப்பிற்காகவும், சபை அங்கத்தினர்களின் ஒப்புதலுக்காகவும் கர்த்தரை துதிக்கிறேன். புதிதாக சபைக்குழுவில் இணைந்திருக்கிற திரு.ரவிந்திரா அவர்களை வாழ்த்துகிறேன்.

நமது திருச்சபையின் அனைத்து நிகழ்வுகளும் ஆன்லைன் மூலமாக கர்த்தரின் மேலான கிருபையால் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வரும் நாட்களில் கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக ஆயத்தப்படுகிறோம்; நடைபெற இருக்கும் அனைத்து ஆராதனைகளுக்காகவும், திருச்சபையின் முன்னேற்றத்திற்காகவும், ஒவ்வொரு ஊழியங்களுக்காகவும் அனுதினமும் உங்கள் தனி மற்றும் குடும்ப ஜெபங்களில் ஊகமாய் ஜெபிக்குமாறு மிகவும் அன்பாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தேவாசீர்வாதம், தேவ கிருபை உங்கள் அனைவரோடும் எப்போதும் இருப்பதாக..

இப்படிக்கு ...
அன்புடன் கிறிஸ்துவின் பணியில் எஸ். சுரேஷ் ராஜன்...






# தீனாள்...

பின்பு அவள் ஒரு குமாரத்தியையும் பெற்று, அவளுக்கு தீனாள் என்று பேரிட்டாள். ஆதி 30:21.

**Afterward she bore a daughter and called her name Dinah. Gen 30:22.**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப் பெயரில் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**குடும்பத்தில் ஓரங்கட்டப்பட்ட உடன்பிறப்பு தீனாள்:**

யாக்கோபுக்கு பன்னிரண்டு மகன்களும் ஒரு மகளும் பிறந்தனர் (ஆதி 35:23-26) இந்த பன்னிரண்டு மகன்களுடன் ஒரு மகளும் இருந்தார்; அவர்தான் தீனாள் ஆவார். இவர் லேயாளுக்கு பிறந்தவர் இவருடைய பெயர் ஆதி 30:21'ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆண் குழந்தைகளே அதிகமாக வரவேற்கப்பட்ட அந்த நாட்களில், யூதமரபில் ஒரு பெண் குழந்தை பிறந்தது என்பது சவாலாகவே இருந்து வந்திருக்கலாம். தலைமைத்துவம் என்பது ஆண்களுக்கு மட்டுமே என்ற நிலையில் இருந்தது. எப்படியெனில் பன்னிரண்டு மகன்களில் யோசேப்பை விடுத்து அவர் மகன்கள் இரண்டு பேருக்கும் (எப்ராயிம், மனசே) ஒரு கோத்திரம் பாதியாகப்பகிரப்பட்டு, நிறைவு செய்யப்படுகிறது, ஒரு இடம் கூட தன் சகோதரிக்கு கொடுக்க மனதில்லாமல் போயிற்று. இன்றையக் காலகட்டத்தில் சொத்துரிமையில் எல்லாக் குழந்தைகளுக்கும் உரிமை என்ற சட்ட திருத்தம் வந்திருந்த போதும் பெண்களை ஓரங்கட்டும் போங்கு இருந்துக்கொண்டுதான் இருக்கிறது. எனவே, தீனாள் ஒரு பெண்ணாக இருந்தபோதிலும் பன்னிரு சகோதரர்களின் உடன் பிறந்த சகோதரியாகப் பிறந்த போதிலும், ஓரங்கட்டப்பட்டவராகவே பார்க்கப்பட்டார்....

**பழிவாங்கும் படலத்தில் தீனாள்:**

தீனாள் தன்னுடைய வாலிபப் பருவத்தில் மிகவும் அழகானவர், இஸ்ரவேலில் இளம் வாலிப பெண் என்றால் பன்னிரண்டு முதல் பதினான்கு வயதில் இருப்பவர்கள் ஆவார்கள். இப்படிப்பட்ட வயதில் இருப்பவர்கள் வீட்டைவிட்டு வெளியே வந்து விளையாடுவது இயல்பான ஒன்றாகும். இப்படி ஒருநாள் பிற பெண்களைப் பார்த்துவிட்டு விளையாடி விட்டு வரும்பொழுது "செக்கேம்" என்னும் ஊர் தலைவன் தீனாளுடைய அழகில் மயங்கி அவளைக் கவர்ந்து சென்று சிறுமைப்படுத்தினான் (ஆதி 34:2) பிறகு இஸ்ரவேலர் அல்லாத செக்கேமும் அவருடன் இருக்கும் எல்லா ஆண்மக்களும் விருத்தசேதனம் செய்துக் கொள்ள வேண்டும் என வற்புறுத்துகின்றனர். இதற்கு செக்கோம் ஒப்புக்கொண்டு விருத்தசேதனம் செய்துகொண்டனர். (ஆதி: 34:33) மூன்றாம் நாள் வயலில் இருக்கும் தருணத்தில், தீனாவின் சகோதரர்கள் செக்கொமையும் அவர் தந்தை ஆமோரயும் வாளினால் கொன்று போட்டனர் என வாசிக்கிறோம். 2000 ஆண்டுகளுக்கு முன்பே பெண்களை பகடைக்காய்களாக வைத்து பழிவாங்கும் நிகழ்வு நடந்திருக்கிறது.

இவ்வாறு தீனா குறித்தும் நாம் இந்த நாளிலே சிந்திக்க அழைக்கப்படுகிறோம் இன்றைக்கும் பெண்கள் இப்படிப்பட்ட நிலையில் இருப்பதை சிந்தித்துப் பார்க்க அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!
இறைப்பணியில் உங்கள் ஆயரம்மா
**Mrs. E. Nancy Baskar**

# தேவனுடைய பிள்ளைகளின் அடையாளங்கள்



கிறிஸ்துவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது அவருடைய பிள்ளைகளாய் மாறுகிறோம். நம்முடைய அனுதின கிறிஸ்தவ வாழவில் நாம் கிறிஸ்துவில் வளர்ச்சி பெறுகிறவர்களாக காணப்பட வேண்டும். அந்த வளர்ச்சி நம்மை சுற்றி இருப்பவர்கட்கும் ஆசீர்வாதமாக அமைய நம்முடைய வாழ்வு காணப்பட வேண்டும். முதலாவது அதற்கென நாம் நம்மை எவ்வண்ணமாக அடையாளப்படுத்திக் கொளவது என்பதனை சில வேத வசனங்கள் மூலம் காண்போம்.

**சுய வெறுப்பு**: அப்பொழுது இயேசு தம்துடைய சீஷர்களை நோக்கி: “ஒருவன் என்னைப் பின் பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்ற கடவன்”. மத்தேயு 16:24.

**இசேுவைப் போல் மாறுதல்:** “சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல தேறினவன் எவனும் தன் குருவைப் போலிருப்பான்.” லூக்கா 6:40.

**இயேசுவுக்கு முதலிடம்**: “யாதொருவன் என்னிடத்தில் வந்து தன் தகப்பனையும் மனைவியையும் பிள்ளைகளையும் தன் சகோதரரையும் சகோதரிகளையும் தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்கு சீஷனாயிருக்க மாட்டான்”. “தன் சிலுவையை சுமந்து கொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்கு சீஷனாயிருக்க மாட்டான்”. லூக்கா 16: 26&27.

**ஒருவரிலொருவர் அன்பாயிருத்தல்:** “நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள், நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்கு கொடுக்கிறேன்”. “நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்” என்றார். யோவான்13:34& 35

**கனி கொடுத்தல்:** நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார் எனக்கும் சீஷராயிருப்பீர்கள். யோவான் 15:6.

ஆம் அருமையானவர்களே...! வேதத்திலே நாம் இன்னும் அனேக காரியங்களை இவ்வண்ணமான அறிவுரைகளாக ஆலோசனைகளாக காணலாம். இவைகளையெல்லாம் நம் அனுதின வாழ்கையிலே நாம் பின் பற்றுகிறோமா ?

**சிந்திப்போம் !! செயல்படுவோம் !!!**

ARTICLE BY: MR. M. NESAMONY

# பரிசுத்தம்




ஐரோப்பாவின் வடபகுதகளில் உள்ள காடுகளில் எர்மின் என்ற ஒரு வகை மிருகம் வாழ்கிறது. இதற்க்கு வெள்ளையான கம்பளி போன்ற ரோமம் உண்டு. அந்த மிருகம் அதன் ரோமத்தின் வெண்மை தன்மை மாறிவிடாதபடி அழுக்காகி விடாதபடி ரெம்பவும் கவனமாக இருக்குமாம். இவ்வகை மிருகங்கள் மலை பிளவுகளிலும் பெரிய பொந்துகளில் வசிக்குமாம். இவ்வகையான மிருகங்களை பிடிக்க விரும்புகிறவர்களுக்கு அதனை மிகவும் எழிதில் பிடித்துவிட முடியாது. அதற்காக மனிதர்கள் அதனைப் பிடிக்க என்ன செய்வார்களாம் தெரியுமா? அந்த மிருகம் வசிக்கும் பொந்துகளில் தார் பூசிவிடுவர்களாம் அத்துடன் குப்பை கூளம் மற்றும் சாம்பல்களை போட்டு விடுவர்களாம். அதன் பின்னர் வேட்டை நாய்களை ஏவிவிடுவர்களாம். அந்த வேட்டை நாய்களுக்கு தப்ப இந்த எர்மின்கள் தங்கள் இருப்பிடத்தை நோக்கி ஓடுமாம். ஆனால் வாசலில் குப்பை கூளம்! தார், சாம்பல் இதனைக் கண்டதும் தன் ரோமம் வெண்மையான அழகான ரோமம் பாழாகி விடுமே என எண்ணி பொந்துக்குள் பாதுகாப்பாக செல்வதை விட்டுவிட்டுப் பகைவர்களிடம் அகப்பட்டுக்கொள்ளுமாம். ஆம் அன்பானவாகளே! தன் உடம்பை எவ்விதத்திலும் அழுக்காக்கி கொள்ள விரும்பாத இந்த எர்மின் மிருகம் தன் உயிரைவிடவும் சுத்தத்திற்க்கு முன்னுரிமை கொடுக்கிறது.

ஆன்பானவர்களே! ஒரு மிருகத்திற்கு இத்தனை உணர்வு. அப்படியானால் மனிதர்களான நானும் நீங்களும் இந்த எர்மின்களைப்போல பரிசுத்தமாக வாழ முயல தேவன் நமக்கு கற்றுகொடுத்திருக்கிறர். கறையான வாழ்வை நீக்கி பரிசுத்தமான வாழ்வை வாழ முயவ்வோம்.

**“பரலோக சிந்தை உன்னை நிரப்பும் போது**
**உலக ஆசைகளின் இழப்பு குறையும்”**

MR. NELSON SOPITHA RAJ




The Lord's covenant was the Ark.

God prescribed a way to carry the Ark.

David prepared a place for the Ark.

Priests and Levites consecrated themselves for the Ark.

Levites carried the Ark.

They ministered before the Ark.

They burned offerings before the Ark.

Blew Trumpets before the Ark.

Made music before the Ark.

Gatekeepers guarded the Ark.

They danced before the Ark.

They rejoiced because of the Ark.



BUT THE PROMISE OF THE NEW COVENANT IS **HIS GRACE**

Isaiah 54 : 10

THE COVENANT OF MY PEACE SHALL NOT BE REMOVED, SAID THE LORD WHO HAS MERCY ON YOU.

SO,
SHALL WE TRUST & SEEK LORD JESUS GRACE & MERCY WHICH WILL NEVER FAIL…!!!

Women's FELLOWSHIP

Mrs. Augusta Lawrence

# Royal Clarintha

1746ம் ஆண்டு தஞ்சாவூரில் இந்து பிராமண குடும்பத்தில் **கோகிலா** என்ற பெண் பிறந்தாள். சிறு வயதிலேயே தன் பெற்றோர்களை இழந்ததினால் அவளுடைய தாத்தாவின் அரவணைப்பில் வளர்ந்தாள். அவளுடைய தாத்தா தஞ்சாவூரிலே மராட்டிய மன்னனாக இருந்த சரபோஜி என்பவரின் அரண்மனையில் பெரிய குருவாக இருந்தார். சிறுவயதிலேயே கோகிலா சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மாராட்டிய மொழிகளை நன்கு கற்று தேர்ந்தாள். தனது 12'ம் வயதில் ஒரு கோவிலில் மந்திரங்கள் சொல்வதற்க்கு செல்லும் வழியில் ஒரு கொடிய விஷப்பாம்பு அவளை கடித்தது. அப்போது அங்கு வந்த ஆங்கிலேய போர்வீரன் ஜான் லிட்டில்டான் என்பவர் அவளை காப்பாற்றினார். கோகிலாவின் 13'ம் வயதில் மராத்தி பிராமண பண்டிதருடன் திருமணம் முடிந்தது. எதிர்பாராதவிதமாக கோகிலா கணவர் ஓராண்டுக்குள் மரித்துப் போனார். எனவே அப்போது இந்து சமுதாய தர்மத்தின் அடிப்படையில் கணவன் மரித்து விட்டால் அவனோடு உயிரோடு இருக்கும் மனைவியையும் சிதையிலே தள்ளிவிட்டு எரித்து விடுவார்கள். இது சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் என்பதாகும்.

அவளுடைய கணவனுடைய சிதையில் இவளை ஜனங்கள் தள்ளிவிட எத்தனிக்கும் போது அவள் எழுப்பிய கூச்சலைக் கேட்டு அங்கு வந்த ஆங்லேய கர்னல் ஜான் லிட்டில்டான் மீண்டும் அவளை காப்பாற்றுகிறார். இதை பார்த்து ஆத்திரமடைந்த பிராமண பண்டிதர்கள் கோகிலா ஊருக்குள் வரக்கூடாது என்றும் குடும்பத்தோடு தொடர்பு கொள்ள கூடாது என்றும், யாரவது அவளுக்கு அடைக்கலம் கொடுத்தால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அறிவித்தனர். எனவே இந்த இளம் விதவையை யாரும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லாத போது அந்த கர்னல் ஜான் லிட்டில்டான் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்கின்றார். இப்போது இந்த கர்னல் பாளையம்கோட்டைக்கு தஞ்சாவூரிலிருந்து மாற்றப்பட்டார். அங்கு கோகிலாவுக்கு அந்த கர்னல் தன் தாயின் பெயரான கிளராவோடு இந்தியா என்றும் சேர்த்து கிளாரா இந்தியா என்று பெயர் சூட்டினார். காலப்போக்கில் கிளாரிந்தா என்று அழைக்கப்பட்டாள். பின்பு அவளுக்கு ஆங்கிலம் மூலம் இயேசுகிறிஸ்துவை அறிவித்தார்; மேலும் திருச்சபைக்கும் அழைத்துச் சென்றார். இப்படியாக கிளாரிந்தா இயேசுவின் அன்பை பெற்றவளாக தற்பொழுது கிறிஸ்தவளாக மாற விரும்பினாள்.

இந்த நிலையில் ஆங்கில இராணுவ வீரர்களுக்கு ஊழியம் செய்வதற்காக C.F. ஸ்வாட்ஸ் ஐயர் அவர்கள் தஞ்சாவூருக்கும் பின்னர் திருச்சிக்கும் அனுப்பப்பட்டார். இப்போது இவரை சந்திக்க கிளாரிந்தா வந்து தான் கிறிஸ்தவளாக மாற வேண்டும் என்றும் அதற்காக ஞானஸ்தானம் தரும்படியாக கேட்டுக் கொண்ட போது C.F. ஸ்வாட்ஸ் அவர்கள் கிளாரிந்தா யார் என்பதை அறிந்துகொண்டு அவள் கர்னல் ஜான் லிட்டில்டான் என்பவரின் மறுமனையாட்டியாய் இருந்ததினால் அவளுக்கு ஞானஸ்தானம் கொடுக்க மறுத்துவிட்டார். ஆனாலும் கிளாரிந்தா மனம் தளராமல் இயேசுவிடம் தன் குறைகளைக்கூறி ஆறுதலைப் பெற்றுக்கொண்டாள். இந்த சூழ்நிலையில் ஜான் லிட்டில்டான் போரில் மரித்துப்போகவே கிளாரிந்தா மீண்டும் விதவையானாள். உலகமே அவளுக்கு சூனியமாக தெரிந்தது. ஆனால் ஆண்டவரின் அன்பும், ஆறுதலும் அரவணைப்பும் அவளுக்கு அதிகமாய் கிடைத்தது.

## கோகிலா - கிளாரிந்தா

1778'ம் ஆண்டு ஒருமுறை C.F. ஸ்வாட்ஸ் ஐயர் அவர்கள் பாளையங்கோட்டைக்கு அனுப்பப்பட்டார். அதை கேள்விப்பட்ட கிளாரிந்தா மீண்டும் அவரிடம் தனக்கு ஞானஸ்தானம் கொடுக்க விடும்பி கேட்டுக்கொண்டாள். அவளுடைய விசுவாசத்தையும் ஆண்டவர் மீது கொண்ட பற்றையும் அறிந்து கிளாரிந்தாவின் 32'ம் வயதில் 25/02/1778 ஆண்டு அவளுக்கு "ராயல் கிளாரிண்டா" என்று ஞானப் பெயர் சூட்டி ஞானஸ்தானம் கொடுத்தார். கிளாரிந்தாவோடு அவர் வீட்டு வேலைக்காரியின் மகன் ஹென்றி (Hendry) என்றும், அந்த வேலைக்காரி சாரா என்றும் ஞானஸ்தானம் பெற்றனர்.

**கிளாரிந்தா தான் திருநெல்வேலியின் முதல் கிறிஸ்தவள்.** இப்போது கிளாரிந்தா தேவனின் ஊழிய அழைப்பைப் பெற்று திருநெல்வேலியின் முதல் தமிழ் மிஷனெரியாக மாறி ஊழியம் செய்தாள். இரண்டு ஆண்டுக்குள் 40 பேர் ஞானஸ்தானம் பெற்றனர். இப்போது ஓலையால் ஒரு ஆராதனைக் கூடத்தை நடத்த ஒழுங்கு செய்து தனது சுவிசேஷ வேலையை செய்ய ஆரம்பித்தாள். பெண்களுக்காக வீட்டு கூட்டம், மற்றும் சிறு பிள்ளைகளுக்கு கல்வி கற்று கொடுக்கவும் ஆரம்பித்தார். கிளாரிந்தாவின் ஊழிய வாஞ்சையை பார்த்த அநேக ஆங்கிலேய அதிகாரிகள் உதவியோடு ஒரு சிறிய ஆலயத்தை கட்டி முடித்தாள். 1778 ஆண்டு இந்த ஆலயத்தை C.F. ஸ்வாட்ஸ் ஐயர் அவர்கள் பிரதிஷ்டை செய்து குளோரிந்தா திருச்சபை யென்று திறந்து வைத்தார். ஆனால் திருநெல்வேலி மக்கள் இந்த ஆலயத்தை பாப்பாத்தி அம்மாள் கோயில் என்றே அழைத்தனர்.

கிளாரிந்தா ஒரு பிராமண பெண் என்பதால் அநேக பிராமணர்கள் ஆண்டவரை பற்றி அறியலானார்கள். சபை ஊழியராக திரு. சத்திய நாதன் பிள்ளை அவர்களை நியமிக்க C.F. ஸ்வாட்ஸ் ஐயர் அவர்களுக்கு கடிதம் எழுதினார். இதை ஏற்றுக்கொண்டு திருநெல்வேலியின் முதல் சபை ஊழியராக திரு. சத்திய நாதன் பிள்ளை அவர்கள் நியமிக்கப்பட்டு இந்த ஆலயத்தில் வெகு சிறப்பாக ஊழியம் செய்து வந்தார்கள். இதன் நிமித்தமாக 1802ம் ஆண்டு சபை உறுப்பினர்கள் ஐந்தாயிரத்திற்கும் அதிகமானோர் விசுவாசிகளானார்கள். கிளாரிந்தா அவர்கள் ஊழியத்தில் ஜாதி, குலம், கோத்திரம், பாலினம் என்று பாகுபாடு பாராமல் ஊழியம் செய்ததினால் அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

புதிய விசுவாசிகள் இயேசுவைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஒரு பள்ளிக் கூடம் கட்ட விரும்பி அதை செயல்படுத்தினார். 1787'ல் பள்ளி கட்டிமுடிக்கப்பட்டது. அதுதான் இன்று செயின்ட் ஜான்ஸ் கல்லூரியாக விளங்குகிறது. ஒதுக்கப்பட்ட மக்களுக்கு என்று தன்னுடைய செலவில் குடிநீர் வழங்க ஒரு கிணறு வெட்டப்பட்டது. இது இன்றும் பாப்பாத்தி அம்மா கிணறு என்று அழைக்கபடுகிறது. இந்நிலையில் திடீரென உடம்பு சரியில்லாமல் 1806'ம் ஆண்டு தன்னுடைய 60'ம் வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். கிளாரிந்தா திருநெல்வேலி மாவட்டத்தின் "மூலைக்கல்" என்று அழைக்கப்பட்டார். திருநெல்வேலி "விடிவெள்ளி" என்றும் போற்றப்படுகின்றார்கள்.

ஒரு பிரமாண பெண் கிறிஸ்துவுக்காக ஒருபடி எடுத்து விட்டபடியால் இன்னும் திருநெல்வேலி மக்கள் வாழ்க்கையில் ஏற்றம் கொண்டது. இது எளிதான காரியம் அல்ல. தன்னுடைய வாழ்க்கையில் எல்லா கஷ்டத்தையும் அனுபவித்தார்கள். ஆனாலும் ஒருபோதும் இயேசுவை விட்டதில்லை. தன் வாழ்க்கையை தேவநாம மகிமைக்காய் அர்ப்பணித்தார்கள். தேவன் இவர்கள் மூலமாய் பல ஜனங்களை இரட்சித்தார். **நீங்கள் இந்த முதல்படியை எடுத்து வைக்க தயாரா?**



Stanly. G

# நாங்கள் காணட்டும்

# We Wish to See

"ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம் என்று அவனைக் கேட்டுக்கொண்டார்கள்" (யோவான் 12:21).

இயேசுவைக் காண விரும்புகிறோம் என்பதே ஆயிரக்கணக்கான மக்களின் வாஞ்சை. இந்த வாஞ்சை இன்று மட்டுமல்ல, உலக தோற்றம் முதற்கொண்டே ஆயிரமாயிரம் பரிசுத்தவான்களின் வாஞ்சையாகவும் இருக்கிறது.

ஆஸ்பத்திரியிலே, டாக்டரைக் காணவேண்டும் என்று ஆட்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். மந்திரி வீட்டிலே மந்திரியை பார்க்க வேண்டுமென்று உட்கார்ந்திருக்கிறார்கள். கல்லூரியிலே, பிள்ளைகளுக்கு இடம் கிடைக்க வேண்டும் என்பதற்காக பெற்றோர்கள் கல்லூரி முதல்வரின் அறைக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்களெல்லாம் உலகப்பிரகாரமான நன்மைகளுக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் இயேசுவை காண விரும்புவீர்களென்றால், அது நித்தியமான ஆசீர்வாதங்களை உங்களுக்குக் கொண்டு வரும். சிலர் சரீர நோய் நீங்குவதற்காக, சிலர் சாபத்தின் கட்டுகள் முறிப்பதற்காக, இன்னும் சிலர் இரட்சிப்பின் சந்தோஷத்தால் நிரப்பப்படவும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரம்பி வழியவும் கிறிஸ்துவண்டை வருகிறார்கள். கர்த்தர் தம்மை நாடி வருகிறவர்களுக்கு, நித்திய ஜீவனையும் பரலோக வாசஸ்தலங்களையும் வாக்களித்திருக்கிறார்.

தேவபிள்ளைகளே, இயேசுவை காண வேண்டுமே என்கிற வாஞ்சை உங்களுக்கு உண்டா? அவருடைய பொன் முகத்தை தரிசிக்க வேண்டுமே என்கிற தரிசனம் உங்களுக்கு உண்டா? அவருடைய சாயலில் திருப்தியாக வேண்டுமே என்கிற இடைவிடாத தாகம் உங்களுக்கு உண்டா?

நீங்கள் அவரைக் காண வாஞ்சிப்பதைப்போல கர்த்தரும் உங்களைக் காண வாஞ்சையுள்ளவராயிருக்கிறார். இயேசு சொன்னார், "வருத்தப்பட்டுப்

youth FELLOWSHIP

பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத். 11:28). தன்னண்டை வருகிறவனை அவர் புறம்பே தள்ளுவதில்லை. கர்த்தரைக் காண என்ன வழி என்றும் அவரை தரிசிப்பதற்கு எதையெல்லாம் கைக்கொள்ள வேண்டும் என்றும் ஒருவேளை நீங்கள் கேட்கலாம். வேதம் சொல்லுகிறது, "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" (மத். 5:8)

இருதயத்தில் நீங்கள் சுத்தமுள்ளவர்களாய் விளங்கும்போது கர்த்தரைத் தரிசிக்கக்கூடிய ஒரு பெரிய பாக்கியத்தை நீங்கள் பெற்றுக்கொள்ளுவீர்கள். வேதம் சொல்லுகிறது, "பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும் தேவனை தரிசிப்பதில்லையே" (எபி. 12:14).

நீங்கள் கர்த்தரைத் தரிசிக்க விரும்பினால், பாவத்தை உங்களைவிட்டு அகற்றுங்கள். பாவம் அகற்றப்பட ஒரே ஒரு வழி கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படுவதுதான். கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி உங்களை சுத்திகரிக்கும். தேவபிள்ளைகளே, இயேசுவே, உம்மைக் காண விரும்புகிறேன் என்று ஆவலோடு அவருடைய பாதத்திற்கு ஓடி வரும்போது நிச்சயமாகவே அவர் உங்களோடுகூட பேச மிகவும் ஆவலுள்ளவராயிருக்கிறார்.

**"அவர்கள் அவரை நோக்கிப் பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை"**

(சங். 34:5).




**கிறிஸ்தவன்**

தன் சவால்களை முழங்கால்களிலேயே எதிர்கொள்கிறான்!

youth Fellowship
SANTHOSH KUMAR

Junior B





# Joel, Jonathan & Shelbino




Teacher: Augusta Laurence


The Conversion of Saul to Paul...
1 Now Saul, still breathing threats and murder against the disciples of the Lord, went to the high priest, 2 and asked for letters from him to the synagogues at Damascus, so that if he found any belonging to the Way, both men and women, he might bring them bound to Jerusalem.
3 As he was traveling, it happened that he was approaching Damascus, and suddenly a light from heaven flashed around him; 4 and he fell to the ground and heard a voice saying to him,
"Saul, Saul, why are you persecuting Me?"
5 And he said,
"Who are You, Lord?"
And He said,
"I am Jesus whom you are persecuting, 6 but get up and enter the city, and it will be told you what you must do."
7 The men who traveled with him stood speechless, hearing the voice but seeing no one. 8 Saul got up from the ground, and though his eyes were open, he could see nothing; and leading him by the hand, they brought him into Damascus.



KIDS COLOURING

BEGINNER

Not Just Colouring... teach the Story



PRIMARY

# Pauls Shipwreck Word Search

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| E | N | D | R | C | A | T | S | A | F | E | T | Y | N | E |
| S | E | A | I | A | T | B | H | E | N | I | S | M | O | D |
| S | U | M | I | R | E | N | D | R | E | S | A | T | V | E |
| A | I | S | I | G | N | S | L | L | A | W | A | C | I | D |
| N | N | T | A | O | I | Q | A | A | T | I | E | O | I | T |
| G | T | E | M | D | D | O | R | I | R | M | P | A | U | L |
| E | U | L | L | H | A | C | O | N | L | E | Q | S | I | S |
| L | O | N | C | E | N | T | U | R | I | O | N | T | A | N |
| D | R | E | V | E | G | E | X | E | R | I | R | I | U | R |
| L | A | O | R | E | E | O | L | O | R | S | I | S | E | R |
| S | E | W | E | U | R | I | F | A | I | T | H | M | V | E |
| L | A | I | Q | U | O | T | N | O | N | S | E | C | T | E |
| T | U | N | D | O | U | O | R | E | S | H | I | P | Q | U |
| Z | R | D | G | A | S | I | T | E | U | F | E | T | V | U |
| L | A | S | R | E | R | S | M | O | L | B | E | A | C | H |


| | | | |
|---|---|---|---|
| ANGEL | COAST | SAFETY | SWIM |
| BEACH | DANGEROUS | SAILORS | WINDS |
| CARGO | FAITH | SEA | |
| CENTURION | PAUL | SHIP | |

Your Name Here...

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

# THE TRANSFIGURATION

junior




## ACROSS

**1** These became as white as light (7)

**4** One of the old prophets (5)

**6** One of the disciples (4)

**7** One of the disciples (5)

**8** One of the disciples (5)

**9** Jesus' face shone like this (3)

**10** It came from the cloud (5)


## DOWN

**2** One of the disciples offered to make three of these (8)

**3** One of the old prophets (6)

**4** The place where the transfiguration took place (8)

**5** The reaction of the disciples when they heard God (9)



# 1 Timothy

INTERMEDIATE

SENIOR

1. What did Paul instruct Timothy to charge the Ephesians?
   Who is the law for?


2. What should be done "First of all?
   What rationale did Paul use for a woman to be in submission?

4. What was Timothy exhorted to give attention to?
   What was Timothy to take heed to?

5. A widow must be at least what age before the church should consider supporting her?
   What does Paul say about laying hands on someone?

6. What can those who desire to be rich fall into?
   What was Timothy instructed to avoid?

Clue: The answers are in this chapters



# Manna Participants...

| Kidz Colouring | Word Search | Cross Word | Bible Quiz |
|---|---|---|---|
| HAZEL HARTLYN | JASON ERIC | ROSHAN | ROSHAN |
| CRASSLIN DEVONA | JOHAN SANJO | SHELBINO PAUL | DENNIS |
| REAGAN SHAN | JEREMIAH | JONATHAN | JOSHIKA |
| KARISS ANGELO | JONATHAN | | JOSHUA |
| CHRIS GABRIEL | | | |
| JANIA PRENI | | | |
| JOHAN SANJO | | | |
| JEMIMA ASHNI | | | |
| JASON ERIC | | | |








# மாற்கு 1-10

# Bible Quiz

1. இயேசு ஜெப ஆலயத்தில் பிரவேசித்து எங்கு போதகம் பண்ணினார்?

2. எனக்குப்பின் சென்று வா என்றார், அவன் எழுந்து அவருக்குப்பின் சென்றான் யார் இவர்? எங்கு உட்கார்ந்திருந்தார்?

3. எந்த வீடு நிலை நிற்காது என்றார்?

4. அன்று சாயங்காலத்தில், அவர் அவர்களை நோக்கி------------------------------------------------------------ என்றார்?

5. இயேசுவின் பாதத்தில் விழுந்த ஜெப ஆலயத் தலைவன் யார்?

6. ஏரோது யாருடைய மனைவியை தனக்கு மனைவியாக்கிக் கொண்டார்?

7. வானத்தை அண்ணாந்து பார்த்து பெருமூச்சு விட்டு------------------------------ என்றார்? அதற்கு பொருள் என்ன?

8. இயேசுவும் சீடர்களும் எந்த பட்டணத்தில் உள்ள கிராமங்களுக்கு சென்றார்கள்?

9. நீங்கள் உங்களுக்குள்ளே எதைக் குறித்து தர்க்கம் பண்ணுகிறீர்கள் என்று எங்கு கேட்டார்?

10. யாக்கோபின் மேலும், யோவானின் மேலும் எத்தனை பேர் எரிச்சலானார்கள்?

**கடந்த மாதம் கேள்விக்கான பதில்**

1. மத் 21:15
2. மத் 21:17
3. மத் 22:30
4. மத் 22:41,42
5. மத் 24:16
6. மத் 24:27
7. மத் 25:18
8. மத் 26:2
9. மத் 27:37
10. மத் 28:16

## அக்டோபர் மாத விடை எழுதியவர்கள்

திருமதி. நான்சி பாஸ்கர் | திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல் | திரு.ஜெயபிரதீப் கிரிஸ்டோபர்
திருமதி. ஜெனிபர் இம்மாக்குலேட் | திருமதி. பமீலா டேனியல் | திருமதி. ஜமுனா ராணி
திருமதி. ராதிகா செல்வகுமார் | திருமதி. ஜெயந்தா ஜாண் | திருமதி. ஜெயின் ராஜவேல்
திருமதி. பிப்லின் நெல்சன் | திருமதி. ஹெப்சிபாய் நேசமணி | திருமதி. ரோஸ்லின் பாலாஜி
திருமதி. ஷெரின் டியென்ஷன் | செல்வி. ஜெரின் மேக்டலின் | திருமதி. அகஸ்டா லாரன்ஸ்

# Happy Birthday!

| | |
|---|---|
| 1 Nov | Mr. M.C.Christopher |
| 6 Nov | Mr. Paul Gnana Prabu.R |
| 8 Nov | Mstr. Joash Cyrus S/o Mr. Ashok Daniel Prabakaran |
| 9 Nov | Mrs. Sunitha Ravindra |
| 12 Nov | Ms. Jenisha Christina D/o M.C.Christopher |
| 14 Nov | Ms. Bessy Rose D/o Mr. Justin Oliver |
| 14 Nov | Mrs. Jein Arputhakani Rajavel |
| 15 Nov | Mstr. Jahosh S/o John Joseph |
| 17 Nov | Mrs. Harika Chandrasekar |
| 19 Nov | Mr. Prince Emmanuvel |
| 19 Nov | Mr. Stanly G |
| 21 Nov | Mr. Lawrence Gambeeram |
| 23 Nov | Mrs. Ceciliya Rajkumar |
| 23 Nov | Mstr. Joel S/o Dr. Shino Mathew |
| 25 Nov | Ms. Abiya D/o Mr. Sankaran Chinniyan |
| 26 Nov | Baby. Evalina D/o Mr. Jayan Dharmaraj |
| 27 Nov | Mrs. Suja Jasmine Messiah Das |
| 27 Nov | Mrs. M. Aishwariya Vinith Samuel |
| 27 Nov | Mrs. Annie Selvi Danesh Rao |
| 28 Nov | Mrs. Josephine Nimshi Prince Emmanuvel |
| 29 Nov | Mr. S. Deva Prakash |

November



# HAPPY WEDDING ANNIVERSARY

*8th Nov*

*Mr. Prem Jeniffer &*

*Mrs. Baby Christy Monalizha*

*23rd Nov*

*Mr. Stanly G &*

*Mrs. Gold Jency R*

*30th Nov*

*Mr. Babu Abraham &*

*Mrs. Babitha*

# பாடல் பிறந்த கதை

## சார்ல்ஸ் வெஸ்லி



120 வருடங்களுக்கு முன் இங்கிலாந்து தேசத்திலிருந்து அமெரிக்க தேசத்திற்கு மெதுவாக ஒரு கப்பல் ஊர்ந்து சென்று கொண்டிருந்தது.

அப்போழுது தூரத்தில் தண்ணீரில் ஒரு மிதவைப் பொருள். பக்கத்தில் வேறு ஒரு கப்பலும் இல்லை. அதில் ஆட்களும் யாரும் தென்படவில்லை.

அதை கிட்டத்தில் பார்க்கும் ஆர்வத்தில், ஒரு சிறு படகில் அதை நோக்கி பயணிக்கிறார்கள். அதனை நெருங்கிய போது, அந்த காலத்தில் பிரசித்தி பெற்ற **"இயேசு என் ஆத்தும நேசர்"** என்ற பாடல் அந்த பொருள் மிதந்த திசையிலிருந்து கணீரென்று வருகின்றது. அருகில் சென்று பார்த்தால் ஒரு தாய் மகளுடன் அந்த மிதவை பிடித்துக் கொண்டு அந்த பாடிக் கொண்டிருந்தார். அவர்களை மீட்டு அந்த தாயின் கணவரிடம் சேர்த்தார்கள். பலர் மனதைத் தொட்டு ஆண்டவர்பால் ஈர்த்த, இந்த பாடலை எழுத ஆண்டவர் பயன்படுத்திய மனிதர் வேறு யாருமல்ல.

6000 பாடல்களுக்கு மேலாக எழுதி தேவனை மகிமைப் படுத்திய சார்ல்ஸ் வெஸ்லி. மெத்தடிஸ்ட் என்ற இயக்கம் உருவாக காரணமாக இருந்தவரும் இவரே.

டிசம்பர் திங்கள் 18, 1708ம் ஆண்டு பிறந்த இவருடைய தந்தை சபை போதகர். இவரையும் சேர்த்து இவரது குடும்பத்தில் 10 குழந்தைகள். இதன் காரணமாக இவரது குடும்பம் வறுமையின் கோடுகளை தொடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்படியிருந்தும் அவரைத் தத்தெடுக்க ஒரு செல்வந்தர் முன் வந்த போது அதை அன்புடன் மறுத்தார்.

1729 ம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த போது, "மெத்தடிஸம்" (Methodism) என்ற முறையை பயன்படுத்தி உருவகப் படுத்தினார். இதைத் தான் இவரது சகோதரர் மெருகேற்றி "மெத்தடிஸ்ட்" ( Methodist) என்ற சமய இயக்கத்தை உருவாக்கினார். நல்ல குடும்ப வாழ்க்கையை நடத்திய இவர், போதிக்க எங்கு சென்றாலும் மனைவியை அழைத்துச் செல்லும் பழக்கத்தை உடையவர். தனது சகோதரர் ஜான் வெஸ்லி வாழ்க்கையில் இடறி நடந்த போது அதை தடுத்து நிறுத்தி, அவர் தேவ பாதைக்கு திரும்ப உதவி செய்தவரும் இவரே.

# ஜெபிக்க...



நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்.
யோவான் 14 : 13






- உலகம் முழுவதிலும் இதுவரையில் நோய் தொற்றுக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1.22 மில்லியன்னாக அதிகரித்துள்ளது. உலக அளவில் நோய்த்தொற்று பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் இரண்டாவது இடத்திலிருக்கும் நம் இந்திய தேசத்திற்காக ஜெபிப்போம். கொடிய நோய்த் தொற்றினால் தங்கள் குடும்ப உறுப்பினர்களை இழந்து தவிக்கின்ற ஒவ்வொரு நபர்களுக்கும் தேவன் ஆறுதலை கொடுக்க ஜெபியுங்கள்.

- விசேஷமாக அந்த தேசத்தில் மருத்துவர்களாக, செவிலியர்களாக பணி புரியும் நம் இந்திய ஜனங்களுக்காக, நம் குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக நாம் ஜெபிப்போம். கர்த்தருடைய கரம் நம் தேச ஜனங்களை அந்த தேசத்தில் பத்திரமாய் வழிநடத்தவும், தங்கள் பணிகளின் நிமித்தமும், தங்கள் படிப்புகளின் நிமித்தமும் குடியிருக்கிற நம் தேச ஜனங்களை தேவன் தீமைக்கு விலக்கி பாதுகாத்துக்கொள்ள பாரத்தோடு ஜெபியுங்கள்.


- மிஷனெரி மற்றும் முன்னேற்றப் பணிகளில் முழு நேரமாய் ஊழியம் செய்யும் ஊழியர்களுக்காகவும், தங்கள் பணி நேரம் போக மற்ற நேரங்களில் எல்லாம் முன்னேற்ற பணிகளுக்கு முதுகெலும்பாய் இருக்கும் பிரதிநிதிகளுக்காக ஜெபியுங்கள்.

- நமது திருச்சபையின் மூலமாக அனுப்பப்பட்ட மிஷனரிகளுக்காக அனுதினமும் ஜெபியுங்கள். இறைவழி விலகி சிறைவாள் மக்களுக்கு அவர்கள் குறைபோக்கி, நிறைவாழ்வு தரும் கிறிஸ்துவின் அன்பைப் பறைசாற்றி உன்னதருடன் ஓர் உயரிய உறவை ஏற்படச்செய்யும் உணர்வான-உயர்வான பணி; நாம் இணைந்து செய்யும் இப்பணி மூலம் நல்ல அறுவடை கிடைக்க அனுதினமும் மறவாமல் மன்றாடுவோம்.

# தினசரி வேத வாசிப்புப் பகுதிகள் - நவம்பர் 2019

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு,
என் கண்களைத் திறந்தருளும். சங்கீதம் 119:18

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2இராஜா. 14 | 2தீமோ. 4 | ஓசியா 7 | சங்கீதம்120-122 |
| 2 | 2இராஜா. 15 | தீத்து 1 | ஓசியா 8 | சங்கீதம்123-125 |
| 3 | 2இராஜா. 16 | தீத்து 2 | ஓசியா 9 | சங்கீதம்126-128 |
| 4 | 2இராஜா. 17 | தீத்து 3 | ஓசியா 10 | சங்கீதம்129-131 |
| 5 | 2இராஜா. 18 | பிலே. 1 | ஓசியா 11 | சங்கீதம்132-134 |
| 6 | 2இராஜா. 19 | எபி. 1 | ஓசியா 12 | சங்கீதம்135,136 |
| 7 | 2இராஜா. 20 | எபி. 2 | ஓசியா 13 | சங்கீதம்137,138 |
| 8 | 2இராஜா. 21 | எபி. 3 | ஓசியா 14 | சங்கீதம் 139 |
| 9 | 2இராஜா. 22 | எபி. 4 | யோவேல் 1 | சங்கீதம்140,141 |
| 10 | 2இராஜா. 23 | எபி. 5 | யோவேல் 2 | சங்கீதம்142,143 |
| 11 | 2இராஜா. 24 | எபி. 6 | யோவேல் 3 | சங்கீதம் 144 |
| 12 | 2இராஜா. 25 | எபி. 7 | ஆமோஸ் 1 | சங்கீதம் 145 |
| 13 | 1நாளா. 1,2 | எபி. 8 | ஆமோஸ் 2 | சங்கீதம்146,147 |
| 14 | 1நாளா. 3,4 | எபி. 9 | ஆமோஸ் 3 | சங்கீதம் 148 |
| 15 | 1நாளா. 5,6 | எபி. 10 | ஆமோஸ் 4 | சங்கீதம்149,150 |
| 16 | 1நாளா. 7,8 | எபி. 11 | ஆமோஸ் 5 | லூக்கா 1:1-38 |
| 17 | 1நாளா. 9,10 | எபி. 12 | ஆமோஸ் 6 | லூக்கா 1:39-80 |
| 18 | 1நாளா. 11,12 | எபி. 13 | ஆமோஸ் 7 | லூக்கா 2 |
| 19 | 1நாளா. 13,14 | யாக். 1 | ஆமோஸ் 8 | லூக்கா 3 |
| 20 | 1நாளா. 15 | யாக். 2 | ஆமோஸ் 9 | லூக்கா 4 |
| 21 | 1நாளா. 16 | யாக். 3 | ஓபதியா 1 | லூக்கா 5 |
| 22 | 1நாளா. 17 | யாக். 4 | யோனா 1 | லூக்கா 6 |
| 23 | 1நாளா. 18 | யாக். 5 | யோனா 2 | லூக்கா 7 |
| 24 | 1நாளா. 19,20 | 1பேதுரு 1 | யோனா 3 | லூக்கா 8 |
| 25 | 1நாளா. 21 | 1பேதுரு 2 | யோனா 4 | லூக்கா 9 |
| 26 | 1நாளா. 22 | 1பேதுரு 3 | மீகா 1 | லூக்கா 10 |
| 27 | 1நாளா. 23 | 1பேதுரு 4 | மீகா 2 | லூக்கா 11 |
| 28 | 1நாளா. 24,25 | 1பேதுரு 5 | மீகா 3 | லூக்கா 12 |
| 29 | 1நாளா. 26,27 | 2பேதுரு 1 | மீகா 4 | லூக்கா 13 |
| 30 | 1நாளா.28 | 2பேதுரு 2 | மீகா 5 | லூக்கா 14 |
| | | | | |




EDITOR
REV. S. P. BASKAR B.SC. M.A., B.D
CSI TAMIL PARISH, ALAIN, UAE.
POST BOX. 67747 | TEL: +971 (3) 755 9630 | MOB: 052 803 3843
Email: csitcalain@gmail.com | Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL PURPOSE ONLY

CALLIGRAPHY BY: MRS. OLIVIYA SHERIN